செய்தி வெளியீடு எண்–564 நாள்– 2.9.2007

# செய்தி வெளியீடு

## பதிவு மூப்பு அடிப்படையில் முதன்முதலாகத் தேர்வு செய்யப்பட்ட 5098 பட்டதாரி ஆசிரியர்கள் அரசுப் பள்ளிகளில் நியமனம்

### ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர் பட்டியலை வெளியிட்டு முதலமைச்சர் கலைஞர் நியமன ஆணைகளை வழங்கினார்

**தமிழகத்தில் இந்த அரசு 13.5.2006 அன்று அமைந்த பிறகு பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இனி ஒப்பந்த முறை ஆசிரியர் நியமனங்கள் இல்லை என அரசு மேற்கொண்ட முடிவின்படி 1.6.2006 முதல் 46 ஆயிரத்து 605 ஒப்பந்த முறை ஆசிரியர்களுக்கு ஒரே ஆணையின் மூலம் உரிய காலமுறை ஊதியங்கள் அளிக்கப்பட்டு, நிரந்தரப் பணியிடங்களில் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.**

**2006–2007 ஆம் கல்வி ஆண்டில் அரசு உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளிலும், ஊராட்சி ஒன்றிய தொடக்க நடுநிலைப் பள்ளிகளிலும், நகராட்சி மாநகராட்சி நிர்வாகப் பள்ளிகளிலும், 8314 இடைநிலை ஆசிரியர்கள், 473 சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோர் வேலைவாய்ப்புப் பதிவு மூப்பின் அடிப்படையிலும், 12 ஆயிரத்து 504 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 2342 முதுநிலை ஆசிரியர்கள் ஆகியோர் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலமாகவும், தொடக்கப் பள்ளிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட 1009 தலைமையாசிரியர் பணியிடங்களில் பதவி உயர்வு மூலமாகவும், மொத்தம் 24, 642 ஆசிரியர்கள் காலமுறை ஊதியத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்டனர்.**

**பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் இதுவரை தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டு வந்த நடைமுறையை மாற்றி, குறைபாடுகளைத் தவிர்த்திடும் பொருட்டு இனி வேலைவாய்ப்புப் பதிவு மூப்பின் அடிப்படையில், 1:1 என்ற விகிதத்தின்படி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பணி நாடுநர் பட்டியல் பெறப்பட்டு பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என இந்த அரசு கொள்கை முடிவு மேற்கொண்டது.**

அக்கொள்கை முடிவின்படி, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8ஆம் வகுப்புகளுக்காக இந்த அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ள 7,979 பட்டதாரி ஆசிரியப் பணியிடங்களுக்கு வேலைவாய்ப்புப் பதிவுமூப்பு அடிப்படையில் முதன்முறையாகத் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5,098 பட்டதாரி ஆசிரியர்களின் தேர்வுப் பட்டியலை வெளியிட்டு அடையாளமாக 19 ஆசிரியர்களுக்கு உரிய நியமன ஆணைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (2.9.2007) வழங்கி வாழ்த்துகள் கூறினார்.

1973 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஏறத்தாழ 34 ஆண்டுகளாக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தும் இதுவரை வேலை கிடைக்காமல் பணி நியமனத்திற்காகக் காத்திருந்த பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகப் பணி நியமனங்களை வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் நியமன ஆணைகளைப் பெற்ற ஆசிரியர்கள், பல ஆண்டுகளாகப் பதிவு செய்தும் வேலை கிடைக்குமா என்ற கவலையுடன் இருந்த தங்களுக்கு பதிவு மூப்பின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்ற இந்த அரசின் அறிவிப்பும், அதன்படி நியமன ஆணைகளை முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் பெறக்கூடிய அருமையான வாய்ப்பும் கிடைத்ததை எண்ணி நாங்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறோம் என்று கூறி தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள 5,098 பட்டதாரி ஆசிரியர்களில் 3,700 பேர் அதாவது 73 விழுக்காடு ஆசிரியர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, செயலாளர் திரு குற்றாலிங்கம், இ.ஆ.ப., ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் திரு. இராம மோகன்ராவ், இ.ஆ.ப., பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. இரா. கண்ணன், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் உறுப்பினர் செயலர் திருமதி. எம்.இலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

======

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.